பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**03 10 2026** **SATURDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** மத்திய அரசின் சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரித்துள்ளதாக நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

**2.** நிதி ஸ்திரத்தன்மை, உலகளாவிய பொருளாதார சூழலுடன் இணைந்துள்ளதாக ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்கோத்ரா கூறியுள்ளார்.

**3.** ஆந்திரப்பிரதேசத்தின் **Sri** நகரில் உள்ள தொழிற்சாலையில் இன்று கொதிகலன் வெடித்த விபத்தில் நான்கு பேர் உயிரிழந்தனர்.

**4.** **Fly Dubai** விமானத்தில், விமானியை துணை விமானி தாக்கிய சம்பவம் தீவிரவாத செயல் என்று ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அரசு தலைமை வழக்கறிஞர் தெரிவித்துள்ளார்.

**5.** ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா **21** தங்கம், **27** வெள்ளி, **37** வெண்கலப் பதக்கங்களுடன், பதக்கப்பட்டியலில் நான்காவது இடத்தில் உள்ளது.

- - இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>>>

கடந்த பத்தாண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் சீர்திருத்த நடவடிக்கைகள் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதிகரித்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற பொருளாதார மாநாட்டில் உரையாற்றிய அவர், கட்டமைப்பு, முதலீடு, வங்கி சீர்திருத்தம் உள்ளிட்டவையின் மூலம் பொருளாதாரத்தில் மேம்பட்டு வருவதாக கூறினார்.

உலகளாவிய பொருளாதார நெருக்கடியின்போதிலும் மத்திய அரசின் திட்டங்கள் மூலம் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி ஏழு புள்ளி எட்டு சதவீதத்தை எட்டியுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

நடப்பு நிதியாண்டுக்கான மூலதன செலவினம் **12** லட்சத்து **22** ஆயிரம் கோடி ரூபாயாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பிரதமரின் முத்ரா யோஜனா திட்டத்தின்கீழ், **52** கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

பிரதமரின் வீட்டுவசதித் திட்டம், உஜ்வாலா இலவச சமையல் எரிவாயுத் திட்டம், ஆயுஷ்மான் பாரத் மருத்துவக்காப்பீட்டுத் திட்டம் உள்ளிட்ட மக்கள் நலத்திட்டங்கள் மூலம் நாட்டின் வளர்ச்சியில்

மக்களின் பங்களிப்ப உறுதி செய்யப்பட்டுள்ளதாக திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

<<<<<>>>>>>>

நிதி ஸ்திரத்தன்மை, உலகளாவிய பொருளாதார சூழலுடன் இணைந்துள்ளதாக ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்கோத்ரா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற பொருளாதார மாநாட்டில் உரையாற்றிய அவர், கோவிட் பெருந்தொற்று காலத்தில் உலக நாடுகள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டதை சுட்டிக்காட்டினார்.

நிலையான நிதி திட்டங்கள் மூலம் மட்டுமே முழுமையான பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியும் என்று அவர் கூறினார்.

மேற்காசியா போன்ற உலகளாவிய பிரச்சினைகளின் போதும், இந்தியாவின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வருவதாக திரு. சஞ்சய் மல்கோத்ரா தெரிவித்தார்.

<<<<<>>>>>>>

அதிநவீன போர் விமானங்களை கொள்முதல் செய்வதற்கான நடைமுறைகள் இறுதி செய்யப்பட்டு வருவதாக இந்திய விமானப்படை தளபதி **Air Chief Marshal** ஏ.பி.சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உலகளாவிய போர் சூழல் காரணமாக, அனைத்து நாடுகளிலும் போர்த் தளவாடங்கள், ஆயுதங்கள், போர் விமானங்கள், கண்காணிப்பு சாதனங்களுக்கு பற்றாக்குறை நிலவும் வேளையில், போர்த்தளவாட உற்பத்தியில் சுயசார்பு அடைய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

விமானப்படையில், ட்ரோன் பயன்பாட்டிற்கு என தனிப்பிரிவு ஏதும் தொடங்கும் உத்தேசம் தற்போதைக்கு இல்லை என்று குறிப்பிட்ட அவர், ஏற்கனவே உள்ள பிற பிரிவுகளுடன் ஒருங்கிணைக்கப்படும் என்றும் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு பற்றிய கேள்விக்கு பதிலளித்த ஏர் சீப் மார்ஷல் ஏ.பி.சிங், விமானப்படையின் அனைத்துப் பிரிவுகளிலும் பயன்பாட்டில் உள்ள போதிலும், மனிதர்கள்தான் அதனை கட்டுப்படுத்துவதாக தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

ஆந்திரப்பிரதேசத்தின் **Sri** நகரில் உள்ள தொழிற்சாலையில் இன்று கொதிகலன் வெடித்த விபத்தில் நான்கு பேர் உயிரிழந்தனர்.

சிறப்பு பொருளாதார மண்டலத்தில் உள்ள இந்த தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில் இரண்டு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

காயமடைந்து மருத்துவமனையில் மூன்று பேர் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இதில் இரண்டு பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த தாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தோர்களின் குடும்பத்தினருக்கு ஆளுநர் திரு அப்துல் நசீர், முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

<<<<<>>>>>>>

புதுதில்லியில் குற்றவியல் சட்டத்தின் **163-**ஆவது பிரிவின்படி கட்டுப்பாடுகள் அமலில் உள்ளதாக தில்லி காவல்துறை தெரிவித்துள்ளது.

இதன்படி, புதுதில்லியில் சட்டவிரோத கூட்டங்களும், பொதுக்கூட்ட உரைகளும், கோஷங்கள், பேரணி, ஆர்ப்பாட்டம், தடை செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளது.

புதுதில்லியில் போராட்டம் நடத்த அனுமதி அளிக்கப்படவில்லை என்று தில்லி காவல்துறை திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் இந்த உத்தரவை பின்பற்ற வேண்டும் என்று தில்லி காவல்துறை கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<<>>>>>>>

மக்கள் நலனே தேசத்தின் நலன் என்பதை, தாரக மந்திரமாகக் கொண்டு செயல்பட்டு வரும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, 25 ஆண்டுகள் பொதுசேவையை நிறைவு செயதுள்ள நிலையில், அவரது தொலைநோக்குப் பார்வையின் கீழ், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில், மத்திய அரசு செயல்பட்டு வருகிறது.

குறிப்பாக, மக்களின் உடல் நலனைப் பாதுகாப்பதில் தனிக் கவனம் செலுத்தி வரும் மத்திய அரசு, ஒரு குடும்பத்திற்கு, ஆண்டுக்கு 5 லட்சம் ரூபாய் வரை மருத்துவக் காப்பீடு வழங்கி வருகிறது.

இது தொடர்பான சிறப்புத் தொகுப்பில் இன்று இடம் பெறுகிறது, பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார காப்பீட்டுத் திட்டம்.

*(வாய்ஸ் ஓவர் - **Voice** - 85 Sec.)*

*(மக்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாக, பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டு ஜன் ஆரோக்கியா திட்டம் மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*இத்திட்டத்தின்கீழ், தகுதிவாய்ந்த குடும்பத்திற்கு, ஆண்டுக்கு **5** லட்சம் ரூபாய் வரை, மருத்துவக் காப்பீடாக வழங்கப்படுகிறது. இதன் மூலம், நாடு முழுவதும் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில், கட்டணமின்றி சிகிச்சை பெற்றுக்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.*

*மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவதற்கு 3 நாட்களுக்கு முன்பும், மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பிய பிறகு 15 நாட்கள் வரையும் மேற்கொள்ளப்படும் மருத்துவச் செலவுகளும், இந்த காப்பீட்டுத் திட்டத்தில் அடங்கும்.*

*ஒரு குடும்பத்தில் எத்தனை பேர் இருந்தாலும், வயது மற்றும் பாலின கட்டுப்பாடுகள் ஏதுமின்றி இதன் மூலம் பயன்பெறலாம்.*

*பயனாளிகள், அவர்களது சொந்த மாநிலத்தில் மட்டுமின்றி, நாட்டின் எந்தப் பகுதியில் உள்ள மருத்துவமனையிலும் சிகிச்சை பெறவும் இந்த திட்டத்தில் அனுமதிக்கப்படுகிறது.*

*இதில் குறிப்பிடத்தக்க அம்சமாக, 70 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள், வருமான உச்சவரம்பு மற்றும் சமூக - பொருளாதார நிலையை கணக்கில் கொள்ளாமல், பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் ஜன் ஆரோக்யா திட்டத்தின்கீழ், ஆண்டுக்கு 5 லட்சம் ரூபாய் வரை இலவச சிகிச்சை பெறவும் வகை செய்யப்பட்டிருப்பது, பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.)*

<<<<<>>>>>>>

**Fly Dubai** விமானத்தில், விமானியை துணை விமானி தாக்கிய சம்பவம் தீவிரவாத செயல் என்று ஐக்கிய அரபு எமிரேட் அரசு தலைமை வழக்கறிஞர் டாக்டர் **Hamad Saif Al Shamsi** தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக எமிரேட் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், இந்த சம்பவத்தை ஐக்கிய அரபு எமிரேட் அரசு தலைமை வழக்கறிஞர் விசாரித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

விமானம் துபாயிலிருந்து, இஸ்ரேலின் டெல்அவிவ் நகருக்குச் சென்று கொண்டிருந்த போது, விமானி மீது ஓமன் நாட்டைச் சேர்ந்த துணை விமானி தாக்குதல் நடத்தி, விமானத்தை கட்டுக்குள் கொண்டுவர முயற்சித்ததாக கண்டறியப்பட்டது.

இதுதொடர்பாக மேலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்த செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்காக டிஜிட்டல் ஆவணங்களை சோதனை செய்து வருவதாக கூறப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>>

**Hormuz** நீரிணையில் ஏவுகணையால் தாக்கப்பட்ட எண்ணெய் கப்பலில் இருந்து ஐந்து இந்திய மாலுமிகள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

இதுதொடர்பாக, ஓமனில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், குவைத்தின் **MT Kazimah** என்ற எண்ணெய் கப்பல் தாக்கப்பட்டதாக கூறியுள்ளது.

இதில் பயணம் செய்த ஐந்து இந்தியர்களை ஓமன் கடற்படையினர் பாதுகாப்பாக மீட்டதாக தெரிவித்துள்ளது.

இதற்காக, ஓமன் அரசுக்கு, வெளியுறவு அமைச்சகம் நன்றி தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>>

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியா இன்று 5 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

ஜப்பானில் நடைபெற்றுவரும் இப்போட்டிகளில் இந்தியா 21 தங்கம், 27 வெள்ளி, 37 வெண்கலப் பதக்கங்களுடன், பதக்கப்பட்டியலில் நான்காவது இடத்தில் உள்ளது.

ஆடவர் ஹாக்கி இறுதியாட்டத்தில் இந்தியா 5-1 என்ற கோல் கணக்கில், மலேசியாவை தோற்கடித்து தங்கப்பதக்கம் வென்றுள்ளது.

இதனையடுத்து, லாஸ் ஏஞ்சலிஸில் 2028-ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிக்கு நேரடியாக இந்தியா தகுதி பெற்றுள்ளது.

ஆடவர் கிரிக்கெட் இறுதியாட்டத்தில் இந்தியா — பாகிஸ்தானை வென்று தங்கப்பதக்கத்தை கைப்பற்றியுள்ளது.

மல்யுத்தப் பிரிவில் **Aman Schrawat**-யும், மகளிர் கோல்ஃப் பிரிவில் **Pranavi Urs**-ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

வில்வித்தைப் பிரிவில் இந்தியாவின் **Kukum Mohod** தங்கப்பதக்கம் வென்றார்.

-----------------

பதக்கங்களை வென்ற இந்திய வீரர்களுக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

-----------

நியூசண்டிகரில் நடைபெற்று வரும் மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் வெஸ்ட் இண்டீஸ் வெற்றிபெற இந்தியா 352 ரன் என்ற இலக்கை நிர்ணயித்துள்ளது.

முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில், 7 விக்கெட் இழப்பிற்கு, 351 ரன் எடுத்தது.

கே எல் ராகுல் அபாரமாக ஆடி, 129 ரன்னுக்கு ஆட்டமிழக்காமல் இருந்தார்.

352 என்ற வெற்றி இலக்குடன் விளையாடிவரும் வெஸ்ட் இண்டீஸ் சற்றுமுன்வரை 7 ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 54 ரன் எடுத்துள்ளது.

**<<<<<END>>>>>>>>**